# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

### சட்டமானிப் பரீட்சை – நிகழ்நிலை – 2022

### நிகழ்நிலைப் பரீட்சைக்கான மாணவர் பிரகடனம்

| | | |
|---|---|---|
| **1.** | **மாணவர் பெயர்:** | |
| **2.** | **பதிவு இலக்கம்:** | |

**பொதுப் பிரகடனம்**

நான் இத்தால் நிகழ்நிலை பரீட்சை மற்றும் அதன் முடிவுகள் தொடர்பில் பல்கலைக்கழகத்தின் தீர்மானத்திற்கு ஆட்சேபனை அல்லது எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் இதனைச் சமர்ப்பிக்கின்றேன். நான் கீழே பட்டியலிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கண்டிப்பாகப் பின்பற்றுவேன்.

1) மாணவர்கள் திட்டமிடப்பட்ட பரீட்சைத் திகதி, தொடக்க மற்றும் நிறைவு நேரம் என்பவற்றை கண்டிப்பாகப் பின்பற்றுதல் வேண்டும்;
2) மாணவர்கள் பரீட்சை தொடர்பிலாக சட்டபீட பரீட்சை ஒருங்கிணைப்பாளரினால் காலத்துக்குகாலம் வெளியிடப்படும் தேவையான அறிவுறுத்தல்கள், அறிவித்தல்கள் மற்றும் நேர அட்டவணைகளைத் தவறாமல் பெற்றுக்கொள்வதற்குத் தங்களுடைய LMS பக்கங்கள் மற்றும் மின்னஞ்சல்களை அடிக்கடி அணுகுதல் வேண்டும்;
3) தேர்வின் போது எந்தவொரு இடையூறும் ஏற்படாமல் இருக்க நிலையான இணைய வசதியுடன் பொருத்தமான கணனி/ சாதனம் கொண்டிருப்பதனை உறுதி செய்து கொள்ளல் மாணவர்களின் பொறுப்பாகும்.
4) பரீட்சைக்கு முகம் கொடுக்க பொருத்தமான சாதனங்கள் கொண்டிராத மாணவர்கள், பல்கலைக்கழக வளாகத்திற்குள் வசதியை பெற்றுக்கொள்வதற்கு சட்டபீட உதவி பதிவாளரிடம் (DR/ Law) தங்களுடைய கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறான நிலையில், குறிப்பிட்ட மாணவர் அனைத்து சுகாதார விதிமுறைகளையும் பின்பற்றி பரீட்சைக்காக பல்கலைக்கழகத்திற்கு சமூகமளித்தல் வேண்டும். இவ்வேற்பாடானது சட்டபீடம் மற்றும் பல்கலைக்கழக அதிகாரிகளின் தற்துணிவிற்குட்பட்டதாகும்.
5) மாணவர்கள் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள் முயற்சித்த அனைத்து கேள்விகளுக்கான பதில்களையும் அறிவுறுத்தல்களுக்கமைய முறையாக பதிவேற்றுதல் வேண்டும்.
6) தொழில்நுட்ப சிக்கல் காரணமாக யாதாயினும் இணைப்பு சிக்கல்களை எதிர்கொள்ளும்பட்சத்தில் மாணவர்கள் அதனை உறுதி செய்யும் நோக்கில் கணனி/ குறித்த சாதனத்தின் திரையை படம்பிடித்து (Screen shot) பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பாக அந்தந்த மேற்பார்வையாளர்களுக்கு உடனடியாக அனுப்பி வைத்தல் வேண்டும். (WhatsApp/ Email/LMS ஊடாக அனுப்பி வைக்கப்படலாம்)
7) பரீட்சையின் போது யாதாயினும் தவறான நடவடிக்கைகளில் மாணவர்கள் ஈடுபடுவராயின், சட்டபீடம் மற்றும் பல்கலைக்கழகம் குறித்த மாணவரை வெளியேற்றுவதுடன் பல்கலைக்கழகப் பரீட்சைத் தேர்வுக்குழுவிற்கு குறித்த செயல் அறிவிக்கப்படும்.
8) மாணவர்கள் மேற்பார்வையாளரிடம் விளக்கத்திற்காக எந்தவொரு வினவலையும் Email/ LMS/SMS மூலம் எழுப்ப முடியும். மேற்பார்வையாளர் விளக்கமளிக்கப்பட கட்டாயமானது என கருதும்பட்சத்தில் அதற்கு விளக்கமளிக்கவோ அல்லது பதிலளிக்கவோ முடியும்.

| | |
|---|---|
| **மாணவர் கையொப்பம்** | |
| **திகதி** | |

## கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை
## சட்டபீடம்
## சட்டமாணிப் பரீட்சை – நிகழ்நிலை - 2022
## ஒவ்வொரு பரீட்சைக்கும் பின்னரான விஷேட பிரகடனம்

| | | |
|---|---|---|
| 1 | மாணவர் பெயர்: | |
| 2 | பதிவு இலக்கம் | |

இப்பரீட்சையானது என்னால் எழுதப்பட்டது என்பதுடன் எனது சொந்த ஆக்கத்தினொரு விளைவு, இலங்கையிலோ அல்லது வேறு நாட்டிலோ உள்ள மற்றொரு நிறுவனத்தின் மற்றொரு பரீட்சையில் பயன்படுத்தப்படவில்லை, மேற்கொள்பட்டியல் மற்றும் மூல ஆக்கம் ஆகிய இரண்டிலும் குறிப்பிடாமல் மற்றையவர்களின் ஆக்கமானது மேற்கோள்காட்டவோ குறிப்பிடப்படவோவில்லை, குறித்த மூல ஆக்கத்தில் குறிப்பிடாமல் எனது முந்தைய ஆக்கங்களை மேற்கோள்காட்டவோ குறிப்பிடவோவில்லையெனவும் இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

இப் பரீட்சையானது கற்கைநெறிக்கான சிறப்புத் துணைவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் நடாத்தப்படுகின்றதென்பதனையும் நல்ல நோக்குக்குடன் தடையற்ற கற்றல் செயற்பாடுகளுக்காகக் குறித்த சந்தர்ப்பமானது வழங்கப்பட்டது என்பதனையும் நான் முழுமையாக அறிவேன். எந்தவொரு ஏற்றுக் கொள்ளமுடியாத செயற்பாடு, பொதுவிதிகள் மற்றும் வழிகாட்டிகாட்டுதல்களை மீறுதல் மோசடியாகக் கருதப்படும் மேலும் இது குறித்த பரீட்சையை அல்லது குறித்த பாடத்தினை ரத்துசெய்வதற்குக் காரணமாகலாம். மோசடி செய்வது அல்லது மோசடி செய்ய எத்தனிப்பதானது பல்கலைக்கழக விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கிணங்க குறித்த பரீட்சாத்தியை வெளியேற்றுவதற்கு வழிவகுக்கும்.

| பாடம் | மாணவர் கையொப்பம் | திகதி |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |